1984 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

சலவைத் தொழிலாளர்களுக்கென திருவண்ணாமலையில் ஒதுக்கப் பெற்ற இடங்கள் ஆக்கிரமிக்கப்பெறுவது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ''வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகரத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கென்று ஒதுக்கப்பெற்ற இடங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலம் திருவண்ணாமலை நகரத்தில் சலவையாளர்களால் உபயோகிக்கப் பட்டு வந்த இடத்தைப் பற்றியது.

மேலே குறிப்பிட்ட இடம் சர்வே எண். டி. எஸ். 96 என்ற எண்ணுடையது. அது செட்டிக்குளம் புறம்போக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது கீழ்க்கண்ட இடங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது :—

வடக்கு	டி. எஸ். எண். 95	கோயில் பட்டா நிலம்.
தெற்கு	டி. எஸ். எண். 97	தீர்வையில்லா தரிசு நிலம்
	டி. எஸ். எண். 521/1	பட்டா புன்செய் நிலம்.
கிழக்கு	டி. எஸ். எண். 95	கோயில் பட்டா நிலம்
மேற்கு	டி. எஸ். எண். 95	கோயில் பட்டா நிலம்.
	டி. எஸ். எண். 521/1	தீர்வையில்லா தரிசு நிலம்

சர்வே எண். டி. எஸ். எண். 96-ல் செட்டிகுளம் என்று ஒரு பெரிய குளம் ஒன்றும், பிள்ளை குளம் என்று ஒரு சிறிய குளமும் உண்டு. அதன் விஸ்தீரணம் 5.07 ஏக்கர். இரண்டு குளங்களும் ஒரு

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1984 மார்ச் 12

சிறு பகுதியில் உள்ளன. மற்றுமுள்ள இடம் காலியிடமாக உள்ளது. காலியிடங்களில் 34 வீடுகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. காலியிடங்கள் இருப்பதினால் அதனை ஆக்கிரமிப்பதற்கு பல பேர்கள் முயன்றும் அதை சலவைத் தொழிலாளர்கள் தடுத்து இருக்கிறார்கள். அவ்விடம் சலவையாளர்கள் துணிகளை காய வைப்பதற்கும் கழுதையை மேய்ப்பதற்கும் பயன்பட்டு வருகிறது. சலவையாளர்கள் அக் குளங்களை உபயோகிப்பதில்லை. அவர்கள் அதற்கு அருகிலுள்ள வண்ணான்குளம் (சர்வே எண். 521/1) என்பதை உபயோகிக்கிறார்கள்.

புதிய பஸ் நிலையம் கட்டுவதற்காக அங்குள்ள ஒன்பது அருந்ததியாளர்கள் எண். 96 எண்ணுள்ள நிலத்தில் தற்காலிகமாக சலவையாளர் சம்மதத்துடன் குடியேற்றப்பட்டார்கள். ஆனால், அவர்கள் சர்வே எண். 520, 95-ல் குடியேறினார்கள். அங்குள்ள எல்லாக் காலியிடங்களும் வீடு கட்டுவதற்கு ஒதுக்கப்படும் என்று கருதி மற்ற வீடு அற்றோர்கள் தங்களுக்கு வீட்டு மனை ஒதுக்கும்படி கோரினார்கள். வருவாய் கோட்ட அலுவலர் மேற்படி சர்வே எண். 96,520 குளம் புறம்போக்கு என்றும் அவைகள் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்படமாட்டா என்றும் கூறியதினால் 4-2-84-ல் அங்கு குடி வந்தவர்கள் தாங்களாகவே காலி செய்து விட்டார்கள். அங்கு யாதொரு கலவரமும் ஏற்படவில்லை. வடாற்காடு மாவட்ட ஆட்சியரும் 17-2-84 அன்று அவ்விடம் சென்று பார்வையிட்டுள்ளார். சலவையாளர்கள் டி.எஸ். 521/1 என்ற எண்ணுள்ள இடத்தில் தங்களுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். எனவே அங்கு ஏற்பட்டது ஒரு சிறிய தகராறு மட்டுமே. சலவையாளர்களுக்கு யாதொரு தொல்லையுமில்லை. அவர்கள் துன்பத்திற்காளானதாகக் கூறுவது சரியல்ல.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருப்பது பெரும்பாலும் அங்கே ஆக்கிரமிப்பு நடைபெற்று இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதாக இருக்கிறது. ஏற்கனவே திருவண்ணாமலை நகரம் வளர்ந்து வரும் ஒரு நகரம். அங்கே இருக்கின்ற சலவைத் தொழிலாளர்களுக்கு வேறு ஆறு அல்லது ஓடை கிடையாது. அந்தக் குளத்துப் பகுதியை நம்பித்தான் அவர்கள் துணியைத் துவைப்பதோ அல்லது துணியைக் காயவைப்பதோ போன்ற பணிகள் நடைபெற்றாக வேண்டும். அதிலே இப்படிப்பட்ட முறையில் வீடுகளைக் கட்டுகிறோம் என்ற பெயராலே ஆக்கிரமிப்பு நடைபெறுமானால் சலவைத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அந்தக் காரணத்தால் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக திருவண்ணாமலை நகரத்தில் ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள்.

அதிலே அவர்களுக்கு உதவியாக இருக்கிற கழுதைகளை ஓட்டிக்கொண்டு, அதன் முதுகின் மேலே கோரிக்கைகளை எல்லாம் எழுதி, திருவண்ணாமலை கோட்டாட்சியர் அலுவலகத்திற்குச்

1984 மார்ச் 12] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

சென்று மனுக்களைக் கொடுத்தார்கள். ஆக்கிரமித்தவர்களை அறவே நீக்கவும் அவர்கள் இனி இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை எழுப்பாமல் இருக்கவும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள எல்லாக் காலி இடங்களும் வீடு கட்டுவதற்கு என்று கருதி, மற்ற வீடு அற்றோர்கள் தங்களுக்கு வீட்டு மனை ஒதுக்கும்படி கோரினார்கள். வருவாய் கோட்ட அலுவலர் மேற்படி சர்வே எண். 96,520 குளம் புறம் போக்கு என்றும் அவைகள் வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட மாட்டா என்றும் கூறியதினால் 4—2—1984 அன்று அங்கு குடி வந்தவர்கள் தாங்களாகவே காலி செய்து விட்டார்கள். அங்கு யாதொரு கலவரமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதை யொட்டி மாவட்ட ஆட்சித் தலைவரும் 17—2—1984 அன்று அவ்விடம் சென்று பார்வையிட்டுள்ளார். சலவையாளர்கள் டி.எஸ். எண். 521/1 என்ற இடத்தில் தங்களுடைய வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். எனவே அங்கு ஏற்பட்டது ஒரு சிறிய தகராறு மட்டுமே. சலவையாளர்களுக்கு யாதொரு தொல்லையுமில்லை. அவர்கள் துன்பத்திற்காளானதாகக் கூறுவது சரியல்ல.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையில் இருப்பதைத்தான படித்தார்கள். அவர்கள் அதிகாரிகள் சொல்வதைப் படித்து இருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் சொல்லியிருக்கின்ற உண்மையை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அங்கே பிரச்சினை— ஏற்கனவே சிலர் வீடுகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். பிறகு அதையே பயன்படுத்திக் கொண்டு எல்லா இடங்களையும் ஆக்கிரமிப்பு செய்துகொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று ஆங்காங்கே, அதற்கான கம்புகள் எல்லாம் நடப்பட்டன. இதற்குத்தான் அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். பிறகு அதிகாரிகள் சென்று ஓரளவிற்கு அதைக் கட்டுப்படுத்தினார்களே தவிர, நிரந்தரமாக அவைகள் நீக்கப்படவில்லை. நான் அமைச்சரிடத்திலே இந்த இடத்திலே, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது— நீங்கள் அரசாங்கத்திலிருந்து அந்த இடத்தை யாரும், எந்த தனி நபரும் வீடோ அல்லது வேறு எந்தவிதமான காரியத்திற்கோ பயன்படுத்தாமல், சலவையாளர்கள் மட்டும் பயன் படுத்துவதற்கான உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்ற உறுதியை அளிக்குமேயானால், அந்தப் பிரச்சினை எழாமல் இருக்கும். அந்த உறுதியை எடுக்க அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பல ஆண்டுகளுக்கு முன்னாலே 34 வீடுகள் அங்கே கட்டி அவர்களாகவே ஆக்கிரமித்து, அங்கே உள்ள காலி இடங்களைப் பயன்படுத்தி

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1984 மார்ச் 12

வருகிறார்கள். துணி துவைக்க, கழுதைகள் மேய்க்க, அந்த இடங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துகின்ற உத்தேசம் எதுவும் இப்போது அரசிற்கு இல்லை அந்த இடம் குளமாக இருக்கிறது. பட்டா செய்து தருவதில் பிரச்சினை இருக்கிறது. எனவே பொதுப்பணித் துறை அதிகாரிகளை கலந்து கொண்டு அவர்களுக்கு செய்து கொடுக்கலாமா என்பதை இந்த அரசு ஆலோசிக்கும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. வரவு-செலவுத் திட்டம், 1984-85 பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கருத்தை வைத்திட விரும்புகிறேன்.

நாவலர் அவர்கள் ரூ. 2,000 கோடி சொச்சத்திற்கு வருவாய்க் கணக்கு காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அவர் சப்மிட் பண்ண பட்ஜெட்டில் கிட்டத்தட்ட ரூ. 57 கோடிக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி உள்ள ஒரு பட்ஜெட்டை வயிற்றில் பால் வார்த்த மாதிரி என்றும், இது மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டி என்றெல்லாம் இந்த மாமன்றத்திலே பேசப்பட்டது. ஆனால் நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.